சுருக்கம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் 2015-16 ஆம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளுதல் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கான ஊரக விலைப்பட்டியல் ஒப்புதல் அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அதி.1) துறை

அரசாணை (நிலை) எண்.87 நாள் 08.06.2015

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.47, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி.1)துறை, நாள்.26.03.2015.
2. அரசாணை (நிலை) எண்.59, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி.1)துறை, நாள்.15.04.2015.
3. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15 கடித எண்.80327/2011/டி.யு.2 நாள் 22.05.2015

.....

ஆணை :

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் திறன்சாரா தொழிலாளர்களுக்கான, நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு வழங்கப்படும் ஊதியத்தினை ரூ.167/– லிருந்து ரூ.183/– ஆக உயர்த்தியும் 2015-16 ஆம் ஆண்டிற்கான, ஊரக விலைப்பட்டியலும் மேலும் கருவேல மரம் நடுதல் உட்பட அனைத்து வகையான மரம் நடுதல் தொடர்பான வேலைகளுக்கும் 2015–16 ஆம் ஆண்டிற்கான ஊரக விலைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் உள்ள பல்வேறு பணிகளுக்கான விலைப்பட்டியல், தற்போதைய ஊரக விலைப்பட்டியலில் இடம்பெறவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005, அட்டவணை I பத்தி 7 மற்றும் 8ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(7) வழங்கப்படும் ஊதியம் செய்கின்ற வேலையின் அளவினைப் பொறுத்து அமைய வேண்டும் என்ற நிலையில், பல்வேறு வகையான வேலைகளுக்கு மாநில

மன்றத்துடன் கலந்தாய்வு செய்து விலைப்புள்ளிபட்டியல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படவேண்டும்.

(8)''ஊரக விலைப்பட்டியலின்படி, திறன்சாரா தொழிலாளர்களுக்கான நிர்ணயிக்கப்படும் ஊதியமானது, அவர்கள் ஒரு மணி நேரம் ஓய்வு உட்பட 8 மணி நேரம் வேலை செய்தால் முழு ஊதியம் கிடைக்குமாறு நிர்ணயிக்கப்படவேண்டும்".

மேலே கூறப்பட்ட விதிகளை பின்பற்றும் விதமாக, திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தனியாக ஊரக விலைப்பட்டியல் வெளியிடுவதற்கான, விரிவான கால நிர்ணய வேலை அளவு (Time and Motion) குறித்து ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இதனால் வேலை செய்யும் அளவினை மதிப்பீடு செய்து ஊரக விலைப்பட்டியல் நிர்ணயம் செய்ய இயலும்.

<u>3.1. கால நிர்ணய வேலை அளவு</u>

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் அடங்கியுள்ள பல்வேறு பணிகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடும் பொருட்டு விரிவான கால நிர்ணய வேலை அளவு மேற்கொள்ள, மாவட்டங்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

<u>3.1.1 மாதிரி மாவட்டங்கள்</u>

வெவ்வேறு மண்டலங்களில், வேலை செய்யப்படும் மொத்த அளவீட்டை மதிப்பீடு செய்ய, கீழ்க்கண்டவாறு 6 மண்டலங்களில் கால நிர்ணய வேலை அளவு மேற்கொள்ளப்பட்டது.

| வ.எண் | மண்டலத்தின் பெயர் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | வடக்கு மண்டலம் | காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம் |
| 2. | மத்திய மண்டலம் | திண்டுக்கல், திருச்சி, பெரம்பலூர் |
| 3. | தெற்கு மண்டலம் | சிவகங்கை, திருநெல்வேலி, இராமநாதபுரம் |
| 4. | டெல்டா பகுதி | நாகப்பட்டினம், தஞ்சாவூர், கரூர் |
| 5. | மேற்கு மண்டலம் | கோயமுத்தூர், நாமக்கல், சேலம் |
| 6. | மலைப்பகுதி | நீலகிரி |

3.1.2. தேர்ந்தெடுக்கப்பட்ட குக்கிராமங்களின் வகைகள்

கால நிர்ணய வேலை அளவு ஆய்வானது 04.05.2015 முதல் 09.05.2015 வரை (ம) 11.05.2015 முதல் 16.05.2015 வரை மேற்கொள்ளப்பட்டது. மேலும் மூன்று வெவ்வேறு வகையான குக்கிராமங்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தேர்வு செய்யப்பட்டு அளவீடு நடத்தப்பட்டது.

(அ) அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட குக்கிராமங்கள்
(ஆ) அடர்த்தி குறைவான மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்கள்
(இ) பரவலான மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்கள்

மொத்த மக்கள் தொகை, தெருக்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு தெருக்களில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை முதலியனவற்றை அடிப்படையாகக் கொண்டு குக்கிராமங்களை வகைப்படுத்த மாவட்டங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

3.1.3 மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

(அ) வீடுகளிலிருந்து குப்பைகளை சேகரித்தல்

- ஒரு மணி நேர ஓய்வு உட்பட 8 மணி நேர வேலையில் குப்பைகள் சேகரிக்கப்படும் அதிகபட்ச வீடுகளின் எண்ணிக்கை, சேகரிக்கப்படும் குப்பைகளின் அளவு ஆகியவை தெருக்களின் எண்ணிக்கை, வீடுகளின் நெருக்கம் ஆகியவற்றுக்கு உட்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது.

- சேகரிக்கப்பட்ட குப்பைகளின் எடையினை மதிப்பீடு செய்ய கட்டிட குப்பைகள் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

(ஆ) குப்பைகளை பிரித்தெடுத்தல்

- சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை பிரித்தெடுக்க தேவையான நேரமும், வெவ்வேறு வகையான குப்பைகளின் அளவீடும் மெட்ரிக் டன் /கிலோ கிராமில் மதிப்பீடு செய்யப்பட்டது.

- கடைசியாக குப்பைகள் சேகரிக்கப்பட்ட இடத்திலிருந்து, குப்பைகள் பிரித்தெடுக்கும் இடத்திற்கு இடையிலான தூரமும், பயணம் செய்த மொத்த தொலைவும் பதியப்பட்டது.

- குப்பைகளானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.
    - உயிரியல் முறையில் நுண்ணுயிர்கள் மூலம் மக்கிப்போகும் தன்மையுள்ள குப்பைகள்:- சமையலறைக்கழிவுகள், உணவு, பசுவின் சாணம் / கால்நடை கழிவுகள், விவசாய , இலைகள், முட்டைக் கூடு உட்பட
    - உயிரியல் முறையில் மக்காத தன்மை கொண்ட, மறுசுழற்சி செய்யக்கூடிய குப்பைகள்:- பொருள் மதிப்பை உடைய நெகிழி, காகிதம், பழைய துணிகள் உட்பட
    - பொருள் மதிப்பை மீண்டும் பெற இயலும் குப்பைகள் அதாவது நெகிழி, காகிதம், துணி உட்பட மறுசுழற்சி செய்ய முடியாத குப்பைகள் பொருள் மதிப்பை மீண்டும் பெற இயலாத குப்பைகள் அதாவது டெட்ரா பைகள், கார்பன் தாள், தெர்மாகோல் உட்பட

(இ) தெரு / சந்து பகுதிகளை பெருக்குதல், வடிகால் மற்றும் தெருக்களை சுத்தப்படுத்தல் ஒரு மணி நேர ஓய்வு உட்பட 8 மணி நேர வேலையில் பூர்த்தி செய்ய இயலும் வெவ்வேறு நீள, அகலம் கொண்ட தெருக்களின் எண்ணிக்கையானது மதிப்பிடப்பட்டது.

(ஈ) குப்பைகளை உரக்குழியில் கொண்டு கொட்டுதல் மற்றும் உரமாக்குதல்

- குப்பைகள் சேகரிக்கப்படும் இடத்திலிருந்து, குப்பைகள் கொட்டப்படும் இடத்திற்கு இடையிலான தொலைவு பதிவுசெய்யப்பட்டது.
- உயிரியல் முறையில் நுண்ணுயிர்கள் மூலம் மக்கிப்போகும் தன்மையுள்ள குப்பைகள் மற்றும் மீதமுள்ள உயிரியல் முறையில் மக்காத தன்மை கொண்ட மக்காத குப்பைகள் குழிகளில் கொட்டுவதற்கான நேரம் தனித்தனியாக மதிப்பிடப்பட்டது.

- குழிகளில் கொட்டும் குப்பைகளின் உயரம் 150 மி.மீ அடையும் பொழுது, மாட்டின் சாணம் மற்றும் மண்ணை மெல்லிய அடுக்காக மேலே பரப்புவது குப்பைகளை உரமாக்குவதற்கு தேவைப்படுகிறது. ஆகவே

குப்பைகளின் மீது மாட்டின் சாணம் மற்றும் மண் பரப்புவதற்கான நேரமும் கால நிர்ணய வேலை அளவீட்டில் மதிப்பீடு செய்யப்பட்டது.

3.1.4 தொழிலாளர்ளை ஈடுபடுத்துதல்

கால நிர்ணய வேலை அளவீட்டினை செய்ய, ஒரு மூன்று சக்கர மிதிவண்டியில் இரண்டு நபர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

| வ.எண் | ஆண் | பெண் | வயது |
|---|---|---|---|
| 1. | 2 | 0 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட விதிப்படி |
| 2. | 1 | 1 | |
| 3. | 0 | 2 | |

- குக்கிராமங்களின் வரைபடம், வீடுகள், சாலைகள், சாலைகளின் நீளம் குப்பைகளை சேகரிக்கும் இடம், குப்பைகளை பிரிக்கும் இடம், குப்பைகளை கொட்டும் இடம் போன்ற விவரங்கள், கால நிர்ணய வேலை அளவீடு நடத்தப்படுவதற்கு முன்னால் தயாரிக்கப்பட்டது.
- குக்கிராமத்திற்கு உரிய பணிமேற்பார்வையாளர், இத்திட்டத்திற்கு பொறுப்பாக்கி, மேலும் உதவிப் பொறியாளர் ஒரு நாளுக்கு ஒருமுறை மற்றும் உதவி செயற்பொறியாளர் இரண்டு நாளுக்கு ஒருமுறை ஆகியோரின் மேற்பார்வையின்கீழ் கால நிர்ணய வேலை அளவீடு செய்யப்பட்டது.
- மேலே குறிப்பிட்ட பணிகள் அனைத்தும், 3 வகையான குக்கிராமங்களிலும் ஒரே நேரத்தில் கால நிர்ணய வேலை அளவீட்டிற்காக மேற்கொள்ளப்பட்டது.
- பின்வரும் பணிகளானது 3 தினங்களுக்கு, ஒவ்வொரு நாளும் 8 மணி நேரம் வேலை, 1 மணி நேர ஓய்வு உட்பட என்பதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.
  - வீடுகளிலிருந்து குப்பையை சேகரித்தல், தெருக்களை பெருக்குதல், குப்பைகளை பிரித்தெடுத்தல், மற்றும் கொட்டுதல் ஆகிய பணிகளை ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்டது.
  - சேகரித்தல், பிரித்தெடுத்தல் மற்றும் கொட்டுதல் ஆகிய பணிகள் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்டது.
  - சேகரித்தல் மற்றும் பிரித்தெடுத்தல் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்டது.
  - சேகரித்தல், தெருக்களை கூட்டுதல் மற்றும் குப்பைகளை பிரித்தெடுத்தல் ஆகியவை ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்டது.
- செயல்படுத்தப்பட்ட அனைத்து பணிகளும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டன.

3.2. கால நிர்ணய வேலை அளவீட்டின்படி கண்டறியப்பட்டவை:-

3.2.1 குக்கிராமங்கள்/ தெருக்கள் வகைப்படுத்தல்:-

குக்கிராமங்களை அவற்றின் மக்கள் தொகையின் அடிப்படையிலும், ஒவ்வொரு தெருக்களிலும் உள்ள வீடுகளின் எண்ணிக்கைகளின் அடிப்படையிலும், அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் மற்றும் பரவலான மக்கள் தொகை கொண்ட குக்கிராமம்

என இரண்டாக வகைப்படுத்தலாம். அடர்த்தி குறைவான மக்கள்தொகை கொண்ட குக்கிராமம் மற்றும் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் ஆகிய பிரிவுகளின்கீழ் சேகரிக்கப்பட்ட விவரங்களில் அதிக வேறுபாடு இல்லாததால், அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் (ம) வீடுகள் பரவலாக அமைந்த குக்கிராமம் என இரு பிரிவு மட்டுமே இறுதி செய்யப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு முன்னால், அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள குக்கிராமங்கள்/தெருக்கள் அதிக நெருக்கமான வீடுகள் கொண்ட குக்கிராமம் மற்றும் பரவலான வீடுகள் கொண்ட குக்கிராமம் என வகைப்படுத்தப்பட வேண்டும்.

**3.2.2** கருத்தில் கொள்ளவேண்டிய காரணிகள்

i. குப்பைகளை சேகரித்தலில் பின்வரும் காரணிகளை கருத்தில் கொள்ளல் வேண்டும்

   a) குப்பைகள் சேகரிக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை

   b) ஒவ்வொரு வீடுகளிலும் குப்பைகள் சேகரிக்க தேவைப்படும் நேரம்

   c) சேகரிக்கப்படும் குப்பைகளின் மொத்த அளவு

   d) குப்பைகள் சேகரிக்கப்படுவதற்கான பயணித்த மொத்த தூரம், குப்பைகள் சேகரிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கையும், பயணித்த தொலைவும் குக்கிராமங்களின் வகைகளைப் பொறுத்து அமையும்.

ii. அதிக நெருக்கமான வீடுகள் கொண்ட குக்கிராமங்களில் குப்பைகளை சிறிது தொலைவு பயணித்தாலே நிறைய வீடுகளிலிருந்து சேகரிக்க முடிகிறது. மேலும் குப்பையின் அளவும் அதிகமாக உள்ளது. ஆனால் பரவலாக வீடுகள் அமைந்த குக்கிராமங்களில், குப்பைகள் சேகரிக்கப்படும் வீடுகளும் மற்றும் குப்பையின் அளவும் குறைந்த அளவிலும், அதற்கான நேரம் அதிகமாகவும் உள்ளது.

iii. மேலும் தினந்தோறும் அதே எண்ணிக்கையில் குடும்பங்களிலிருந்து குப்பைகள் சேகரிக்கப்பட்டாலும் குப்பைகளின் அளவு ஒவ்வொரு நாளும் பரவலாக வேறுபடுகிறது. இதற்கான காரணம் ஒவ்வொரு நாளும் உருவாக்கப்படும் குப்பைகளின் அளவு நிலையானதல்ல. எனவே விலைப்பட்டியலை நிர்ணயம் செய்ய சேகரிக்கப்பட்ட குப்பைகளின் அளவினை கிலோகிராம் விகிதத்தில் இறுதி செய்யவேண்டும்.

iv. தெருவை பெருக்குதல் மற்றும் வடிகால்களை தூய்மைபடுத்தும் பணிகளில், அங்கு நிலவும் உள்ளூர் சூழ்நிலைகளின் காரணமாக செய்யப்படும் முழு வேலையின் அளவை மதிப்பிட இயலவில்லை. மேலும் எந்தவொரு அளவுகளையும் நிர்ணயம் செய்ய இயலவில்லை. எனவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் இப்பணியினை மேற்கொள்ள தேவையில்லை.

v. குப்பைகளை பிரிக்கும் பணியை தனி வேலையாக நிர்ணயிக்க இயலாது ஏனெனில், 7 மணி நேரத்திற்கு குப்பை பிரிக்கும் பணியை மட்டும் மேற்கொள்ளுவதால் முழுமையான பயனில்லை. மேலும் சேகரிக்கப்பட்ட குப்பை பிரிதெடுக்கும் பகுதிகளில் சேர்த்த பிறகு, மதியம் பிரித்தெடுக்கும் பணிகளை மேற்கொள்ளலாம். மேலே கூறப்பட்ட அதே காரணத்தினால், உரக்குழியில் குப்பைகளை கொட்டும் பணியினை தனி நடவடிக்கையாக எடுத்துக் கொள்ள முடியாது. எனவே குப்பை சேகரித்தல் (ம) பிரித்தல் பணிகளை உள்ளடக்கியே ஊரக விலைப்பட்டியல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

vi. குப்பைகள் இறுதியாக சேகரிக்கப்படும் இடத்திலிருந்து, குப்பைகளை பிரித்தெடுக்கும் இடமும் ஒரு காரணியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. எனவே குப்பைகள் இறுதியாக சேகரிக்கப்படும் இடத்திலிருந்து, குப்பைகள் பிரித்தெடுக்கும் இடம் **500** மீட்டர் தூரத்திற்குள் இருந்தால், பணியாளர்கள் எளிதாக பிரித்தெடுக்கும் இடத்தை

அடையலாம் என்பது கால–வேலை நிர்ணய அளவீட்டின் மூலம் கண்டறியப்பட்டது. குப்பைகளை பிரித்தெடுக்கும் இடமானது கடைசியாக குப்பைகள் சேகரிக்கப்பட்ட இடத்திலிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் இருக்கும் பட்சத்தில், ஊதியமானது கால வேலை நிர்ணய அளவீட்டின் படி வழங்கப்படும். இத்தொலைவானது 500 மீட்டருக்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் தொழிலாளர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் கடினமான பணியாக உணர்வார்கள். எனவே அவர்களுக்கு சிறப்பு சலுகை வழங்கப்பட்டுள்ளது. குப்பைகள் சேகரிக்கும் இடமானது 500 மீட்டருக்கு அதிகமாகவும், 2 கிலோ மீட்டருக்கு குறைவாகவும் இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு ஊதியத்தில் 10 சதவீதம் பயணப்படியாக வழங்கப்படும். விதிவிலக்காக ஒரு சில இடங்களில் நியாயமான காரணங்களுக்காக, 500 மீட்டருக்கும் மேல் குப்பைகள் சேகரிக்கப்படும் இடம் அமையும் போது வழங்கப்படும் 10 சதவீதம் பயணப்படியானது ஊதியத்தின் ஒரு பகுதியாக வழங்கப்படும்.

vii. அதே போல, சில விதிவிலக்கான நிகழ்வுகளில், குப்பை சேகரிக்கபடும் இடத்திற்கும், குப்பை கொட்டப்படும் உரக் குழிக்கும் இடைப்பட்ட தொலைவு 500 மீட்டருக்கும் அதிகமான இருக்கும் பட்சத்தில், தொழிலாளர்களால் குப்பை சேகரிக்கப்பட்ட இடத்திலிருந்து உரக்குழியில் கொட்டுவது கடினமாக அமையும். எனவே அந்த நிகழ்வுகளில் கூடுதலாக 10ரூபாய் பயணப்படி வழங்கப்படும்.

viii. புவியியல் ரீதியான நிலப்பரப்பு மற்றும் குடியிருப்புகளின் அடிப்படையில், மலைப்பாங்கான பகுதிகளில் தனியாக ஊதிய விகிதம் நிர்ணயிக்கபட வேண்டும் என்பது கால நிர்ணய வேலை அளவீட்டின் மூலம் தெரியவருகிறது. மலைப்பகுதிகளில், உள்ள சரிவான பாதைகளை கருத்தில் கொண்டு, குப்பை கொட்டும் இடமானது 250 மீட்டருக்கு அதிகமாகவும், 1 கிலோ மீட்டருக்குள் அமையும்பட்சத்தில் அவர்களுக்கும் கூடுதல் படி வழங்கப்படும்.

ix. மேலே கூறப்பட்ட காரணிகளைப் பொறுத்தே, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்கள் செய்யும் வேலை அமைவதால், இக்காரணிகளை கருத்தில் கொண்டே ஊதிய நிர்ணயம் செய்யப்பட வேண்டி உள்ளது.

x. குப்பைகள் சேகரித்தல், பிரித்தல் மற்றும் குப்பைகளை கொட்டுதல் ஆகிய பணிக்கு 2 தொழிலாளர்களால் செய்யப்பட வேண்டிய மொத்த அளவின் சராசரி பின்வருமாறு:

| வ.எண் | நடவடிக்கை விவரம் | கால வேலை நிர்ணய அளவீட்டின்படி சராசரியாக செய்த வேலைகளின் அளவீடு (2 தொழிலாளர்கள்) | ஒரு தொழிலாளர் செய்த சராசரி வேலை அளவீடு |
|---|---|---|---|
| 1. | சேகரிக்கப்பட்ட குப்பைகள் | | |
| | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் இரு தொழிலாளர்களால் குப்பை சேகரிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | 150 | 75 |
| | பிரித்தெடுக்கப்பட்ட குப்பைகளின் எடை | 80–100 கிலோ | 40-50 கிலோ |
| | காலம் | 4–5 மணி நேரம் | 4–5 மணி நேரம் |
| | தொலைவு | 0.5– 1 கி.மீ | 0.5 – 1 கி.மீ |

| | | | |
|---|---|---|---|
| 2. | குப்பைகளை பிரித்தெடுத்தல் | | |
| | இறுதியாக குப்பைகள் சேகரிகப்பட்ட இடத்திலிருந்து குப்பைகளை தரம்பிரிக்கும் இடத்திற்கும் உள்ள தொலைவு | 500 மீட்டர் | 500 மீட்டர் |
| | பிரித்தெடுக்கப்பட்ட குப்பைகளின் எடை | 80–100 கி.கி | 40–50 கி.கி |
| | குப்பைகளை பிரித்தெடுக்க ஆகும் நேரம் | 1–2 மணி அளவுகள் | 1–2 மணி அளவுகள் |
| 3. | குப்பைகளை உரமாக்குதல் | | |
| | பிரித்தெடுக்கப்பட்ட குப்பைகளின் எடை | 65–80 கி.கி | 33–40 கி.கி |
| | குப்பைகளை பிரித்தெடுக்க ஆகும் நேரம் | 30 நிமிடங்கள் முதல் 1 மணி வரை | 30 நிமிடங்கள் முதல் 1 மணி வரை |

4. கால நிர்ணய வேலை அளவு ஆய்வின்படி மக்கள் தொகை அடிப்படையிலும், வீடுகளின் அருகாமையின் அடிப்படையிலும் குடியிருப்புகள் ஒவ்வொன்றும், அடர்த்தியான மக்கள் தொகை உடைய குடியிருப்பு, பரவலான மக்கள் தொகை உடைய குடியிருப்பு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. தெருக்களில் 50க்கும் குறைவாக உள்ள வீடுகளை அடர்த்தி குறைவாக உள்ள குடியிருப்புகள் எனவும், 50க்கும் மேல் உள்ள வீடுகளை அடர்த்தியாக உள்ள குடியிருப்புகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், குக்கிராமங்களில் மக்களின் குடியேற்றம் பரவலாக வேறுபடுவதால், மொத்த மக்கள் தொகை, வீடுகளின் எண்ணிக்கை, தெருக்களின் எண்ணிக்கை, வீடுகள் / தெருக்களின் சராசரி எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு குடியிருப்பு / குடியிருப்புகள் தொகுப்பினையும் அடர்த்தியாக மக்கள் தொகை கொண்டவை, பரவலாக மக்கள் தொகை கொண்டவை என வகைப்படுத்தலாம். திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு முன்னால், திடக் கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேர்ந்தெடுத்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சிகளிலும் உள்ள ஒவ்வொரு குக்கிராமமும் அடர்த்தியான, மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் மற்றும் பரவலான மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் என வகைப்படுத்தப்பட வேண்டும்.

5. மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையில், 2015–16ம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான ஊரக விலைப்பட்டியலை அங்கீகரிக்கும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்தினை கவனமாக பரிசீலனை செய்து, 2015–16ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அனுமதி அளித்தும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு 2015–16ம் ஆண்டிற்கான இவ்வரசாணையில் இணைப்பில் உள்ள ஊரக விலைப்பட்டியலுக்கு ஒப்புதல் அளித்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும் அடர்த்தியான மற்றும் பரவலான மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகளை இறுதி செய்ய சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குவதற்கு ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வரசாணையானது நிதித்துறையின் அலுவல் சாரா எண்.121/இ.செ(அ.ரா)/2015 நாள் 02.06.2015ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி
இயக்குநர், சென்னை–15 மூலமாக).
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15 மூலமாக).
செயலாளர், ஊரக வளர்ச்சி அமைச்சகம், ஊரக வளர்ச்சித் துறை,
இந்திய அரசு, கிரிஷி பவன், புதுதில்லி–110 114.
மாநில கணக்காயர், சென்னை–6/18/35
இயக்குநர், கருவூலங்கள் மற்றும் கணக்குகள், சென்னை–15.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.

நகல்
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூத்த நேர்முக உதவியாளர் (நகராட்சி நிர்வாகம்,
ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை)
அரசுச் செயலாளரின் மூத்த தனிச்செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–9.
நிதி(ஊரக வளர்ச்சி)துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (OP2)துறை, சென்னை–9
தேசிய தகவலியல் மையம், சென்னை–9
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

<u>இணைப்பு</u>

(அரசாணை (நிலை) எண்.87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை, நாள் 08.06.2015)

<u>மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – திடக்கழிவு மேலாண்மை – 2015–16ஆம் ஆண்டுக்கான ஊரக விலைப்பட்டியல்</u>

அ. சமவெளி பகுதிகள் (Plain Areas)

குடியிருப்புகளிலிருந்து குப்பைகள் சேகரித்தல் மற்றும் அதனை தரம்பிரித்தல் (இறுதியாக குப்பை சேகரிக்கும் இடத்திற்கும் தரம் பிரிக்கும் இடத்திற்கும் இடைவெளி 500 மீட்டருக்குள்) மற்றும் உரக்குழிகளில் அக்குப்பைகளை கொட்டுதல் மற்றும் உரமாக்குதல் (தரம் பிரிக்கும் இடத்திற்கும் குப்பைகள் கொட்டும் இடத்திற்கும் இடைவெளி 500 மீட்டருக்குள்) போன்ற பணிகளுடன் குடியிருப்புகளிலிருந்து குப்பைகளை சேகரிக்கும் பொழுது தெருக்களில் சேகரிக்கப்பட்ட குப்பைகளையும் சேகரித்தல் போன்ற பணிகளும் அடங்கும்.

| பிரிவு – I அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் | |
|---|---|
| அ. வீடுகளின் எண்ணிக்கை – 75 குடியிருப்புகள்<br>மற்றும்<br>ஆ. சேகரிக்கப்பட்ட குப்பைகளின் எடை – 40 கி.கி | ரூ. 183/– ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு<br>(ஒரே நாளில் குப்பைகளை சேகரித்தல், தரம்பிரித்தல் மற்றும் சேகரிக்கப்பட்ட குப்பைகளை கொட்டுதல்) |

| பிரிவு – II பரவலான மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் | |
|---|---|
| அ. வீடுகளின் எண்ணிக்கை – 50 குடியிருப்புகள்<br>மற்றும்<br>ஆ. சேகரிக்கப்பட்ட குப்பைகளின் எடை – 30 கி.கி | ரூ. 183/– ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு<br>(ஒரே நாளில் குப்பைகளை சேகரித்தல், தரம்பிரித்தல் மற்றும் சேகரிக்கப்பட்ட குப்பைகளை கொட்டுதல்) |

| குறிப்பு | |
|---|---|
| கடைசியாக குப்பை சேகரிக்கப்பட்ட இடத்திலிருந்து தரம் பிரிக்கும் இடத்திற்கு 500 மீட்டருக்கு மேல் 2 கி.மீக்குள் பயணம் செய்திருந்தால் | ரூ.18.30 ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு (கூடுதலாக) |
| தரம் பிரிக்கும் இடத்திலிருந்து உரமாக்கும் இடத்திற்கு 500 மீட்டருக்கு மேல் 2 கி.மீக்குள் பயணம் செய்திருந்தால் | ரூ.18.30 ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு (கூடுதலாக) |

ஆ. மலைப்பாங்கான பகுதிகள்(Hilly Areas)

குடியிருப்புகளிலிருந்து குப்பைகள் சேகரித்தல் மற்றும் அதனை தரம்பிரித்தல் (இறுதியாக குப்பை சேகரிக்கும் இடத்திற்கும் தரம் பிரிக்கும் இடத்திற்கும் இடைவெளி 250 மீட்டருக்குள்) மற்றும் உரக்குழிகளில் அக்குப்பைகளை கொட்டுதல் மற்றும் உரமாக்குதல் (தரம் பிரிக்கும் இடத்திற்கும் குப்பைகள் கொட்டும் இடத்திற்கும் இடைவெளி 250 மீட்டருக்குள்) போன்ற பணிகளுடன் குடியிருப்புகளிலிருந்து குப்பைகளை சேகரிக்கும் பொழுது தெருக்களில் சேகரிக்கப்பட்ட குப்பைகளையும் சேகரித்தல் போன்ற பணிகளும் அடங்கும்.

| பிரிவு – I அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் | |
|---|---|
| அ. வீடுகளின் எண்ணிக்கை – 50 குடியிருப்புகள் | ரூ. 183/– ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு<br>(ஒரே நாளில் குப்பைகளை சேகரித்தல், தரம்பிரித்தல் மற்றும் சேகரிக்கப்பட்ட குப்பைகளை கொட்டுதல்) |
| (மற்றும்) | |
| ஆ. சேகரிக்கப்பட்ட குப்பைகளின் எடை – 30 கி.கி | |

| பிரிவு – II பரவலாக மக்கள் தொகை கொண்ட குக்கிராமம் | |
|---|---|
| அ. வீடுகளின் எண்ணிக்கை – 30 குடியிருப்புகள் | ரூ. 183/– ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு<br>(ஒரே நாளில் குப்பைகளை சேகரித்தல், தரம்பிரித்தல் மற்றும் சேகரிக்கப்பட்ட குப்பைகளை கொட்டுதல்) |
| (மற்றும்) | |
| ஆ. சேகரிக்கப்பட்ட கழிவுகளின் எடை – 20 கி.கி | |

| குறிப்பு: | |
|---|---|
| கடைசியாக குப்பை சேகரிக்கப்பட்ட இடத்திலிருந்து தரம் பிரிக்கும் இடத்திற்கு 250 மீட்டருக்கு மேல் 1 கி.மீக்குள் பயணம் செய்திருந்தால் | ரூ.18.30 ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு (கூடுதலாக) |
| தரம் பிரிக்கும் இடத்திலிருந்து உரமாக்கும் இடத்திற்கு 250 மீட்டருக்கு மேல் 1 கி.மீக்குள் பயணம் செய்திருந்தால் | ரூ.18.30 ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு (கூடுதலாக) |

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்